# மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

## உங்கள் மத்திய சேம நிதிச் சேமிப்பைப் பாதுகாக்க 3 குறிப்புகள்

#1

### உங்கள் தொடர்பு விவரங்களைப் புதுப்பிக்கவும்

நீங்கள் மத்திய சேம நிதிப் பரிவர்த்தனைகளைச் செய்யும் போதெல்லாம் அறிவிப்புகளைப் பெற உங்கள் தொடர்பு விவரங்களைப் புதுப்பித்த நிலையில் வைத்திருங்கள்.

சந்தேகத்திற்குரியப் பரிவர்த்தனைகளைக் கண்டறிய உதவ, நம்பிக்கையான நியமனதாரரை நியமிக்கப் பரிசீலினை செய்யுங்கள்.

#2

### அழைப்புகள் அல்லது செய்திகளைப் பெறும்போது எச்சரிக்கையாக இருங்கள்

Your paragraph text

மத்திய சேம நிதிக் கழகம் உட்பட அரசு அதிகாரிகள், தொலைபேசி மூலம் பணத்தை இடமாற்றம் செய்யவோ அல்லது வங்கி உள்நுழைவு விவரங்களை வெளியிடவோ ஒருபோதும் உங்களிடம் **கேட்க மாட்டார்கள்**.

மத்திய சேம நிதிக் கழகம் **6227 1188** என்ற எண்ணிலிருந்து மட்டுமே அழைக்கும், மேலும் குறுஞ்செய்தி **gov.sg**-இலிருந்து மட்டுமே வரும்.

மத்திய சேம நிதிக் கழகம் WhatsApp போன்ற செய்தி அனுப்பும் பயன்பாடுகளைப் பயன்படுத்தி ஒருபோதும் **அழைக்காது** அல்லது தானியக்கக் குரல் பதிவு அமைப்புகளைப் **பயன்படுத்தாது**.



நீங்கள் மோசடியை சந்தேகித்தால், 24/7 ScamShield உதவித் தொலைபேசி சேவையின் வழி, 1799 என்ற எண்ணை அழைக்கவும்.

மேலும் மோசடி எதிர்ப்பு உதவிக்குறிப்புகளுக்கு விரைவுக் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்: cpf.gov.sg/antiscamtips

# மோசடிகள் குறித்து எச்சரிக்கையாக இருங்கள்

## உங்கள் மத்திய சேம நிதிச் சேமிப்பைப் பாதுகாக்க 3 குறிப்புகள்

#3

### மத்திய சேம நிதித் தொகைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சேவையை செயல்படுத்தவும்

நீங்கள் 55 வயது மற்றும் அதற்கு மேற்பட்டவராக இருந்து, உங்கள் மத்திய சேம நிதிச் சேமிப்பை விரைவில் எடுக்கவில்லை என்றால், 3 எளிய படிகளில் மத்திய சேம நிதித் தொகைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சேவையைச் செயல்படுத்தக் கருத்தில் கொள்ளுங்கள்:




1. “கணக்கு அமைப்புகள்”-ஐப் பார்வையிடவும் (Singpass உள்நுழைவு தேவை)
2. “மத்திய சேம நிதித் தொகை பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சேவையை இயக்கு” என்பதைத் தேர்ந்தெடுக்கவும்
3. உங்கள் மாற்றங்களை மறு ஆய்வுச் செய்து, இணையவழி மத்திய சேம நிதிப் பணமெடுப்புகளை உடனடியாக முடக்க “இப்போது முடக்க” (“Turn on CPF Withdrawal Lock”) என்பதைத் தேர்ந்தெடுக்கவும்

மத்திய சேம நிதித் தொகைப் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் சேவையைச் செயலிழக்கக், கணக்கு அமைப்புகள் வழியாக தினசரி பணமெடுப்பு வரம்பை அதிகரிக்கலாம் (12 மணிநேர குளிர்வித்தல் காலத்திற்கு உட்பட்டது மற்றும் மேம்பட்ட அங்கீகாரம் தேவைப்படலாம்).

நீங்கள் மோசடியை சந்தேகித்தால், 24/7 ScamShield உதவித் தொலைபேசி சேவையின் வழி, 1799 என்ற எண்ணை அழைக்கவும்.

மேலும் மோசடி எதிர்ப்பு உதவிக்குறிப்புகளுக்கு விரைவுக் குறியீட்டை ஸ்கேன் செய்யுங்கள்:
cpf.gov.sg/antiscamtips